செ.வெ.எண்-46 நாள்-24.01.2018

# பத்திரிக்கைச் செய்தி

அரியலூர் மாவட்டத்தில் உள்ள 201 ஊராட்சிகளிலும் கிராமசபைக் கூட்டம், குடியரசு தினமான 26.01.2018 அன்று நடைபெறவுள்ளது. அக்கூட்டத்தில் பின்வரும் பொருட்கள் விவாதிக்கப்படும்.

கிராம ஊராட்சி நிர்வாகம் மற்றும் பொதுநிதி செலவினம் குறித்து விவாதித்தல். 2018-2019ஆம் நிதி ஆண்டில் பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவிருக்கும் ஊராட்சி வளர்ச்சிப் பணிகளுக்கான திட்ட அறிக்கையினை குறித்து விவாதித்தல். குடிநீர் சிக்கனமாக பயன்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளுதல் குறித்து விவாதித்தல். கொசுக்கள் மூலம் பரவும் டெங்கு காய்ச்சல் தடுப்பு நடவடிக்கைகள் குறித்து விவாதித்தல். கிராம வளர்ச்சி திட்டம் (VPDP) குறித்து விவாதித்தல். அந்தியோதயா இயக்கம் மூலம் வறுமை இல்லாத கிராம ஊராட்சியாக நடவடிக்கை எடுக்க தீர்மானித்தல். பிரதம மந்திரி கிராம சாலைகள் திட்டம் II குறித்து விவாதித்தல். நடப்பு நிதி ஆண்டில் ஊராட்சி பகுதிகளில் நடைபெறும் மத்திய அரசு மற்றும் மாநில அரசு நிதியில் நடைபெற்று வரும் பல்வேறு வளர்ச்சி திட்ட பணிகளின் முன்னேற்றம் மற்றும் நிதி செலவினம் குறித்து பொது மக்களுக்கு தெரிவித்தல். சுகாதாரம் குறித்த திறந்தவெளியில் மலம் கழித்தல் அற்ற ஊராட்சியாக அறிவித்ததை தொடர்ந்து அனைத்து நபர்களும் கழிவறையை பயன்படுத்துதல் குறித்து விவாதித்தல். கழிப்பறை கட்டி பயன்படுத்தும் பயனாளிகளுக்கு பாராட்டு தெரிவித்தல். கிராம நலன் கருதி கழிப்பறை பயன்பாட்டை ஊக்குவிக்க குழுக்களுக்கு ஒத்துழைப்பு குறித்து உறுப்பினர்களிடம் கோருதல். திறந்த வெளியில் மலம் கழிப்பதால் ஏற்படும் தீமைகள் குறித்து விவாதித்தல். ஒருங்கிணைந்த சுகாதார வளாகங்கள் குறித்து விவாதித்தல். பள்ளி கழிப்பறைகள் மற்றும் அங்கன்வாடி மைய கழிப்பறைகள் குறித்து விவாதித்தல். திடக்கழிவு மேலாண்மை திட்டம் தொடர்பான கிராம பகுதியில் பிளாஸ்டிக் பைகள் பயன்படுத்துவதை தவிர்க்கக் கோருவது குறித்து விவாதித்தல். 2018-2019ஆம் ஆண்டுக்கான மகாத்மாகாந்தி தேசீய ஊரக வேலை உறுதி திட்டப் பணிகளில் சாத்தியமான பணிகள் குறித்து விவாதித்தல். மகாத்மாகாந்தி தேசிய ஊரக வேலை உறுதி சட்டப் பணிகளில் விவசாயம் மற்றும் தொடர்புடைய 65% மற்றும் 35% இதரப் பணிகள் குறித்து விவாதித்தல் மகளிர் திட்டம் மற்றும் புதுவாழ்வுத் திட்டம் தொடர்பான அறிக்கைகள் குறித்து விவாதித்தல். நியாயவிலை அங்காடிகளின் கணக்குகளை சமூக தணிக்கைக்கு சமர்பித்தல். வெளிநாடு வாழ் தமிழர் நலன் மற்றும் பாதுகாப்பு குறித்து விவாதித்தல். முதியோர் ஓய்வூதிய பயனாளிகளின் பட்டியல் குறித்து விவாதித்தல். முதலமைச்சரின் சூரிய மின்சக்தியுடன் கூடிய பசுமை வீடு திட்ட பயனாளிகளின் 2018-2019 ஆம் ஆண்டிற்கு தேர்வு பட்டியல் குறித்து விவாதித்தல்.

பொதுமக்கள் மற்றும் ஊராட்சி செயலர்களால் கொண்டுவரப்படும் இதர பொருட்கள் குறித்தும் விரிவாக விவாதிக்கப்பட உள்ளதால், அந்தந்த பகுதிகளில் உள்ள பாராளுமன்ற / சட்டமன்ற உறுப்பினர்கள், மகளிர் சுயஉதவிக் குழுக்கள் மற்றும் பொதுமக்கள் பெரும் திரளாக கிராமசபைக் கூட்டத்தில் கலந்துக்கொள்ளுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.க.லட்சுமி பிரியா, இ.ஆ.ப.,** அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**